தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 94/பேரூ/2021

நாள் 22.11.2021

திரு. அ. கிருஷ்ணமூர்த்தி,
உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உளுந்தூர்பேட்டை பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.16, நெ.36 S.K. இல்லம், பிரகாசம் நகர் முதல் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் 03.09.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.9.2021ல் பெறப்பட்டு, 94/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.16 நெ.36 S.K. இல்லம், பிரகாசம் நகர் முதல் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் 03.09.2021 நாளிட்ட முறையீட்டு மனுவில் கொரோனா காலத்தில் அரசின் அறிவுறுத்தலின்படி online மூலம் 16.6.2020 அன்று உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் தமது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததாகவும், தனது விண்ணப்ப எண்.52462 என்றும், விண்ணப்பித்து ஓராண்டுகாலம் முடிவடைந்த பின்னரும் தமக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்றும், இது தொடர்பாக பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக சென்று விசாரித்தபோது online வழியாக விண்ணப்பிக்கக் கூடாது என தெரிவித்ததாகவும், ஆனால் தனக்குப் பிறகு விண்ணப்பித்த சுமார் 30க்கும் மேற்பட்ட நபர்களுக்கு குடிநீர் இணைப்பு

வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இதுகுறித்து, தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தகவல் கோரியதற்கு மற்ற அனைத்து சேவைகளும் online மூலம் வழங்கப்படுகிறது என்றும் குடிநீர் இணைப்பு மட்டும் online வழியே வழங்கப்படுவதில்லை என்றும் உளுந்தூர்பேட்டை பேரூராட்சியால் பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் தற்போது 28.3.2021 முதல் குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, தான் விண்ணப்பித்த நாளினை கணக்கில் கொண்டு, தமக்கு குடிநீர் இணைப்பு பெற்றுத்தருமாறும், தன்னுடைய உரிமையை பெறும் நோக்கிலேயே தான் புகார் மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளிப்பதாகவும், வேறு எந்தவொரு அதிகாரியின் மீதும் வீண்பழி சுமத்தும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார். தமது புகார் மனுவினை ஏற்று, விசாரணை மேற்கொண்டு உரிய ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. உளுந்தூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 01.11.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 25.10.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி 1.11.2021 நாளிட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ள கடிதத்தில் அடைமழை காரணமாக தம்மால் நேரடி விசாரணைக்கு வரஇயலவில்லை என்றும், உளுந்தூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தம்மை தொடர்புகொண்டு குடிநீர் இணைப்பை உடனடியாக தருவதற்கு இசைந்துள்ளார்கள் என்றும், எனவே தான் அளித்துள்ள முறையீட்டு மனுவினை திரும்பப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். உளுந்தூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் பணி மாறுதலில் வேறொரு பேரூராட்சிக்கு சென்றுவிட்டதால், அவருக்கு பதிலாக பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. P. பூமணி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 01.11.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"உளுந்தூர்பேட்டையைச் சேர்ந்த திரு. அ. கிருஷ்ணமூர்த்தி என்பவர் உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் குடிநீர் இணைப்புவேண்டி online மூலம் 16.6.2020ல் விண்ணப்பித்திருந்தார். குடிநீர் இணைப்பிற்கான கட்டணத்தை மனுதாரர் செலுத்தாததால் பேரூராட்சியால் குடிநீர் இணைப்பு வழங்கவில்லை. மேலும் குடிநீர் கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரருக்கு பேரூராட்சியால் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்பதையும், இனிவரும் காலங்களில் குடிநீர் இணைப்புவேண்டி விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய கட்டணம் குறித்து பேரூராட்சியின் மூலம் தெரிவிக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், உளுந்தூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் பணிமாறுதலில் வேறொரு பேரூராட்சிக்கு சென்றுவிட்டதன் காரணத்தினால் அப்பேரூராட்சியில் இளநிலை

உதவியாளராக பணிபுரியும் திரு. P. பூமணி இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் கலந்துகொண்டு அளித்துள்ள வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் அறியப்படுகின்றன:-

- ❖ மனுதாரர் தமது புகார் மனுவில் கொரோனா காலம் என்பதால் அரசின் அறிவுறுத்தங்களின்படி தமது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வேண்டி online மூலமாக 16.6.2020 அன்று விண்ணப்பித்ததாகவும், தனது விண்ணப்ப எண்.52462–ஆக ஏற்கப்பட்டுள்ளபோதிலும், ஒரு ஆண்டுகாலம் முடிவடைந்த பிறகும் தமக்கு குடிநீர் இணைப்பு வழங்கவில்லை என்றும், தான் இதுகுறித்து பேரூராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று விசாரித்தபோது online வழியாக விண்ணப்பிக்கக் கூடாது என தெரிவித்ததாகவும், ஆனால் தமக்குப் பிறகு விண்ணப்பித்த சுமார் 30–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

- ❖ மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் கோரிய தகவல்களுக்கு பொதுத்தகவல் அலுவலர்/செயல் அலுவலர், உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சியால் 4.8.2021 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள பதில் அறிக்கையுடன் பேரூராட்சியால் 1.6.2020 முதல் 27.3.2021 முடிய உள்ள காலத்தில் உளுந்தூர்பேட்டை பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள புதிய குடிநீர் இணைப்பு குறித்த விவரங்களின்படி மனுதாரர் தமது புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் 30–க்கும் மேற்பட்டவர்களுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

- ❖ மேலும், பேரூராட்சியின் ஆன்லைன் மூலம் சொத்துவரி செலுத்துதல், பிறப்பு, இறப்புச் சான்று வழங்குதல், கட்டிட உரிம அனுமதி வழங்குதல் ஆகிய சேவைகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளது என்றும், குடிநீர் இணைப்பு வழங்கும் பணி விரிவு செய்யப்படவில்லை என்பதால், பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக வந்து விண்ணப்பித்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதும் ஏற்க இயலாது.

- ❖ கொரோனா காலத்தில் மனுதாரர் தமது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கக்கோரி online மூலமாக விண்ணப்பித்து அவ்விண்ணப்பத்திற்கு எண் வழங்கப்பட்டு, நிலுவையில் உள்ளதென்றும் பேரூராட்சியின் இணையவழியில் கிடைக்கப்பெற்ற ஒப்புகையை மனுதாரர் தமது புகார் மனுவுடன் இணைத்துள்ள ஆதார ஆவணங்களின்படி அறிய முடிவதால், அவருக்கு முறையாக குடிநீர் இணைப்பிற்கான கட்டணங்களை செலுத்துமாறு பேரூராட்சி நிர்வாகம் தகவல் தெரிவித்து, அதற்கான கட்டணங்களைப் பெற்றுக்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கியிருக்கவேண்டும். மாறாக, அவர் விண்ணப்பித்ததற்குப் பின்னர் பல நபர்களுக்கு குடிநீர் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- இணைய வழியில், அதுவும் கொரோனா பரவல் அதிகமிருந்த காலக்கட்டத்தில் மனுதாரர் online வழியாக விண்ணப்பித்திருந்ததை பேரூராட்சி நிர்வாகம் கருத்திற்கொண்டு கடிதம் மூலம் குடிநீர் இணைப்பிற்கான கட்டண விவரங்களைக் குறிப்பிட்டு, அத்துடன் விண்ணப்பத்தையும் பூர்த்திசெய்து பெற்றுக்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் மனுதாரர் சில தகவல்களை வழங்கக்கோரி அளித்துள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில் மட்டுமே பேரூராட்சியில் online மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி விரிவுசெய்யப்படவில்லை என்ற தகவல் 4.8.2021 அன்று உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- online மூலம் மிகச் சொற்ப விண்ணப்பங்களே கொரோனா காலக்கட்டத்தில் வந்திருக்கக்கூடும் என்பதால், உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது கடமையை சீரிய முறையில் மேற்கொண்டிருந்தால், மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கியிருக்கலாம். பொதுமக்களின் அத்தியாவசிய குறைகளை நிவர்த்திசெய்யவேண்டிய உளுந்தூர்பேட்டை பேரூராட்சி நிர்வாகம் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

4. எனவே, இந்நேர்வில் உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சி நிர்வாகம் மிக மெத்தனமாக இருந்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் கண்டிக்கிறது. மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்காமல் காலம்தாழ்த்தியுள்ள செயலுக்குக் காரணமான உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, துறைரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்கிறது.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. அ. கிருஷ்ணமூர்த்தி,
36, S.K. இல்லம், முதல் தெரு, வார்டு–16,
பிரகாசம் நகர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்–606 107

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)

செயல் அலுவலர்,
உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம்

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

29/11/24

செயலாளர்

29/11/24